# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 171/2—1981 දෙසැම්බර් 14 වැනි සඳුද—1981.12.14

171/2 ம் இலக்கம்—1981 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ. 10/80.

### 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்

### 16 (2) ஆம் பிரிவின் கீழானகட்டளை

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொழில் அமைச்சர் சிறில் பின்ரோ ஜயத்திலகா செனிவிரத்தின ஆகிய யான் அவ்வுட்பிரிவின் நோக்கத் துக்காக, இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஊழியம் தொடர்பில், 1981 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முப்பத்தோராம் நாளை இக் கட்டளையின் மூலம் நிர்ணயிக்கின்றேன்.

கப்டன் சி. பி. ஜே. செனிவிரத்தின,<br>
தொழில் அமைச்சர்.

கொழும்பு.<br>
1981 ம் ஆண்டு திசம்பர் மீ 09 ந் உ.

### அட்டவணை

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்டதும், 50 ற்குக் குறைந்த ஊழியர்களைக் கொண்டதுமான ஏதேனும் தனியார்துறைப் பொறுப்புமுயற்சியொன்றின், பின்வருவன தவிர்ந்த, சேவையில் உள்ள ஊழியம்—

(அ) எவ்வீட்டிலேனும் மனையகச் சேவை ;

(ஆ) முற்றிலும் சமய வழிபாட்டுக்காக அல்லது சமூக சேவைக்காக அல்லது தரும நிறுவனமாக நிறுவிப் பேணப்பட்டுவரும் நிறுவனத்திலோ தாபனத்திலோ உள்ள சேவை ;

(இ) பாலிய குற்றவாளிகள், அநாதைகள், அல்லது துணையற்றோராக, ஊமையராக, செவிடர்களாக அல்லது குருடர்களாக இருப்போருக்குக் கைத்தொழிற் பயிற்சி அளிப்பதனையே முக்கியமானதாகக்கொண்டு நடாத்தப்பட்டுவரும் எப்பொறுப்பு முயற்சியிலும் உள்ள சேவை ;

(ஈ) ஆள் ஒருவரால் ஒரு பொறுப்புமுயற்சியாகக் கொண்டு நடாத்தப்படுவதும், அதில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ளதுமான ஏதேனும் பொறுப்புமுயற்சியில் உள்ள சேவை.

இவ்வட்டவணையில் ஏதேனும் பொறுப்புமுயற்சி தொடர்பில் "குடும்பம்" என்பது, அப்பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தும் ஆள் எனவும் அவரது வாழ்க்கைத்துணைவி எனவும், அவரின் பிள்ளைகள் எனவும், வாழ்க்கைத்துணைவியின் பிள்ளைகள் எனவும் பொருளாகும்.

1–28

---

### 1979 ம் ஆண்டின் 17 ம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டம்

### 6 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1979 ம் ஆண்டின் 17 ம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 6 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங் களின் பிரகாரம், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணத்துறை அமைச்சர் ரணசிங்க பிரேமதாசா ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 4 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

ஆர். பிரேமதாச,<br>
உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணத்துறை அமைச்சர்.

எல்பீபீ/5/125/10<br>
1981, அக்டோபர் 25,<br>
கொழும்பு.

### அட்டவணை

மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டானை உ.அ.அ. பிரிவு, கட்டுநாயகா, 143 ம் பிரிவில் அமைந்துள்ள சென்ற். செபஸ்தியன் திருச் சபைக்குச் சொந்தமான காணிக்குள்ளே இட்டத்தட்ட ½ எக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : செபஸ்தியன் மாவத்தை ;

கிழக்கு : ஜே. கே. பிரான்சிஸ் பெரேரா அவர்களின் தனிப்பட்ட காணி ;

தெற்கு : டொன் அலோசியசின் தனிப்பட்ட காணி ;

மேற்கு : ரீட்டா ராஜபக்சவினதும், மேர்வின் ஜயசூரியாவினதும், பீ. டபிள்யூ. டீ. விக்டர் பெர்னாண்டோவினதும் காணிகள்.

12–556

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது